# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
********

**முறையீட்டு மனு எண்.602/2016/பே.2**
**ஆணை நாள் . 21–12–2018**

**திரு M. கனகராஜ்,**
**26–பி, கடலூர் மெயின்ரோடு,**
**புவனகிரி – 608 601**
**கடலூர் மாவட்டம். –– முறையீட்டு மனுதாரர்**

**திருமதி ச. வள்ளி சச்சிதானந்தம்,**
**முன்னாள் தலைவர்,**
**புவனகிரி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம். –– எதிர் மனுதாரர்**

**ஆணை.**

கடலூர் மாவட்டம் 26,B, கடலூர் மெயின்ரோடு, புவனகிரியில் வசிக்கும் திரு.M.கனராஜன், முறையீட்டு மனுதாரரின் 24.03.2016 நாளிட்ட புகார் மனு பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 6756/2016/இ.2/நாள்.15.06.2016ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 23.06.2016 அன்று பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண் 602/2016 என எண்ணிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 27.06.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரருக்கு முறையீட்டு மனுவினை 2015ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ விதிகள், விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு ரூ. 10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடனும், விதி 4ன் கீழ் உரிய படிவத்தில் (படிவம் –1) பூர்த்தி செய்து சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

அதன்படி முறையீட்டு மனுதாரர் 05.07.2016ம் நாளிட்ட தனது மனுவினை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் 12.07.20.16ல் சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு M.கனகராஜன், தனது முறையீட்டு மனுவில் கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திருமதி. வள்ளிசச்சிதானந்தம் என்பவர் மீது பல்வேறு புகார்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் இம்முறைமன்ற நடுவத்திற்கும் அனுப்பியுள்ளார்.

முறையீட்டு மனுதாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் அளித்துள்ள புகார்கள் குறித்து மேற்படி துறை மூலம் நடவடிக்கையிலுள்ள விவரம் முறையீட்டு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு அளித்துள்ள புகார்கள் தவிர, இதர பிற புகார்கள் தொடர்பாக கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மூலம் உரிய தல ஆய்வு மற்றும் விசாரணைகள் மேற்கொள்ள, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பகள் முறைமன்ற நடுவர் சட்டம், விதி 6(4) (b) ன் கீழ் 11.10.2018ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி விசாரணையில் முறையீட்டு மனுதாரர் தனது புகார்கள் குறித்தான ஆவணங்களை சமர்ப்பித்து தீர்வு காணவும் இம்முறைமன்ற நடுவ 11.10.2018 அறிவிப்பாணை மூலம் மனுதாரருக்கும் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்பட்டது.

இந்நிலையில் இம்முறைமன்ற 26.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி மேற்படி கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விசாரணைக்குப் பின்னர் தேவைப்படின் நாளது தேதியிலான முறையீடுகள் இருப்பின் அதன் விவரங்களை விதிகளின்படி உரிய படிவத்தில் தனது கோரிக்கை/முறையீடு குறித்து உரிய ஆதார ஆவணங்களுடன் முறையீடு செய்து கொள்ளத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு. M. கனகராஜ்,
26–பி, கடலூர் மெயின்ரோடு,
புவனகிரி – 608 601
கடலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்
கடற்கரை சாலை
கடலூர்–607 001.